குழந்தையின்மைக்கான காரணங்களும் அதிநவீன சிகிச்சை முறைகளும்...

டாக்டர் அருணா முருகானந்தம்

பெரம்பலூர் துறைமங்கலம் நான்குரோடு சந்திப்பு அருகே, செல்வா நகரில் செயல்பட்டு வரும் ஹர்ஷிதா மருத்துவ மனை, மகளிர் நலம், மகப்பேறு மற்றும் குழந்தையின்மை சிகிச்சைகளில் அதிநவீன மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. இம்மருத்துவமனையின் மகப்பேறு மற்றும் பெண்கள் நல சிறப்பு மருத்துவர் டாக்டர் அருணா முருகானந்தம், குழந்தையின்மைக்கான காரணங்கள் மற்றும் தாய்மை அடைவதற்கான நவீன சிகிச்சை முறைகள் குறித்து கூறியதாவது :

பெண்களின் வாழ்வில் மகப்பேறு காலம் மிகவும் முக்கியமான கட்டமாகும். கர்ப்பம் உறுதியான உடனே மருத்துவரின் ஆலோசனையின் பேரில் தேவையான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வது, தாயின் உடல்நலத்திற்கும் கருவில் வளரும் குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும்.

தாய்மை என்பது ஒரு பெண்ணின் வாழ்வில் மறு பிறப்பிற்கு ஒப்பானது. எனவே, சத்தான மற்றும் சமச்சீர் உணவு, மன அமைதி, மகிழ்ச்சியான சூழல் ஆகியவற்றை பேணுவது மிகவும் அவசியம். இதில் குடும்பத்தினரின் ஆதரவும் அக்கறையும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை அனைத்தும் கருவில் வளரும் குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றன.

ஹர்ஷிதா மருத்துவ மனையில் குழந்தையின்மைக்கான காரணங்கள் துல்லியமாகக் கண்டறியப்பட்டு, ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதன் மூலம் பல தம்பதிகள் இயற்கை முறையில் கருத்தரிக்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். அனுபவமிக்க மருத்துவர்கள் மற்றும் நவீன மருத்துவ உபகரணங்களின் உதவியுடன் தனிப்பட்ட சிகிச்சை திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

பெண்களின் உடல்நலனை பாதிக்கும் முக்கிய நோய்களில் ஒன்றான கர்ப்பப்பை வாய்ப் புற்று நோய், மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தொற்றால் ஏற்படுகிறது. இதனைத் தடுப்பதற்கான HPV தடுப்பூசி இளம் வயதினருக்கு ஹர்ஷிதா மருத்துவ மனையில் செலுத்தப்பட்டு வருகிறது. சரியான வயதில் இந்த தடுப்பூசியை எடுத்துக் கொள்வதன் மூலம் எதிர் காலத்தில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை பெருமளவில் குறைக்க முடியும்.

மேலும், 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய உதவும் சிறப்பு பரிசோதனைகளும் மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரம்பத்திலேயே நோய் கண்டறியப்படுவதால், சிகிச்சை எளிதாகவும் வெற்றிகரமாகவும் அமைகிறது.

24 மணி நேரமும் பிரசவ சேவை மற்றும் அவசர சிகிச்சை வசதிகள் செயல் பாட்டில் உள்ளன. டாக்டர் முருகானந்தம் தலைமையிலான மருத்துவக் குழுவினர் பொது அறுவை சிகிச்சை, லேப்ராஸ்கோபி (Laparoscopic Surgery), எலும்பு மற்றும் மூட்டு அறுவை சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு மருத்துவ சேவைகளையும் வழங்கி வருகின்றனர். பன்னாட்டு தரத்தில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன அறுவை சிகிச்சை அரங்கம் மருத்துவமனையின் முக்கிய சிறப்பம்சமாக திகழ்கிறது.

பெண்களின் உடல்நலம், பாதுகாப்பான தாய்மை மற்றும் ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கையை உறுதிப்படுத்தும் நோக்கில் தரமான, நம்பகமான மற்றும் மனிதநேய மருத்துவ சேவைகளை தொடர்ந்து வழங்கி வருகிறோம்.

டாக்டர் தேவராஜன் மருத்துவமனை

மனித வாழ்வில் உடல்நலமும் மனவளமுமே முக்கியம்

டாக்டர் புவனேஸ்வரி

மனித வாழ்க்கையில் உடல்நலமும் மனவளமும் ஒன்றுக்கொன்று இணைந்த முக்கியமான அம்சங்களாகும். முழுமையான ஆரோக்கியமே மனிதனின் உண்மையான செல்வம். உடல்நலம் இல்லையெனில் பணம், பதவி, பொருள் உள்ளிட்ட அனைத்தும் பயனற்றதாகிவிடும் என்று டாக்டர் தேவராஜன் மருத்துவ மனையின் மருத்துவர் டாக்டர் புவனேஸ்வரி தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் (WHO) வரையறைப்படி, ஆரோக்கியம் என்பது நோயின்றி இருப்பது மட்டுமல்ல; உடல், மனம், சமூக மற்றும் ஆன்மீக நலன் ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்த முழுமையான வாழ்க்கை நிலையாகும். எனவே, உடல் நலத்துடன் மனநலத்தையும் சமமாக பேணுவது அவசியம்.

மனவளம் என்பது அமைதியான, உற்சாகமான மற்றும் தெளிவான மனநிலையை குறிக்கிறது. நேர்மறை சிந்தனை, தன்னம்பிக்கை, ஆன்மிகம், தியானம் போன்றவை மன வளத்தை வளர்க்க உதவுகின்றன. மனநலம் சீராக இருந்தால்தான் வாழ்க்கையில் உண்மையான மகிழ்ச்சியையும் திருப்தியையும் அனுபவிக்க முடியும்.

ஆரோக்கியமான வாழ்க்கைக்காக தினசரி உணவில் பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள் மற்றும் முழுத் தானியங்களை சேர்த்துக்கொள்ள வேண்டும். சர்க்கரை, உப்பு மற்றும் எண்ணெயை அளவோடு பயன்படுத்த வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் உணவு உட்கொள்வது, பதப்படுத்தப் பட்ட மற்றும் செயற்கை உணவுகளைத் தவிர்ப்பது உடல்நலத்திற்கு மிகவும் நல்லது.

மேலும், தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் வேக நடைப்பயிற்சி, யோகா, நீச்சல், சைக்கிள் ஓட்டுதல் அல்லது நடனம் போன்ற உடற் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். உடற்பயிற்சி செய்வதன் மூலம் உடல் எடை கட்டுப்பாட்டில் இருக்கும். ரத்த ஓட்டம், ஜீரண சக்தி மற்றும் மனநலமும் மேம்படும். மன அழுத்தத்தைக் குறைக்க தினமும் 10 முதல் 20 நிமிடங்கள் தியானம் மற்றும் சுவாசப் பயிற்சி செய்ய வேண்டும். மன அழுத்தம் ஏற்பட்டால் அதை மனதில் வைத்துக்கொள்ளாமல் நம்பிக்கைக்குரியவர்களிடம் பகிர்ந்து பேசுவது, எழுதுவது, இசை கேட்பது, ஓவியம் வரைவது போன்ற படைப் பாற்றல் செயல்பாடுகளில் ஈடுபடுவது நல்ல பலனை தரும். தினமும் ஒரே நேரத்தில் தூங்கும் மற்றும் எழும் பழக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

குறைந்தபட்சம் 6 மணி நேரம் ஆழ்ந்த உறக்கம் அவசியம். உறங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மொபைல் போன், தொலைக் காட்சி, கணினி போன்ற மின்னணு சாதனங்களை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

உடலின் தேவைக்கேற்ப போதுமான அளவு தண்ணீர் அருந்த வேண்டும். சிறுநீர் மற்றும் மலத்தில் ஏற்படும் மாற்றங்கள் உடல்நலக் குறைபாடுகளின் அறிகுறிகளாக இருக்கக் கூடும் என்பதால் அவற்றையும் கவனிக்க வேண்டும். காபி மற்றும் தேநீரை அளவோடு அருந்துவது நல்லது.

ஆரோக்கியம் என்பது தற்செயலாக கிடைப்பதல்ல; திட்டமிட்ட வாழ்க்கை முறை, சரியான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி மற்றும் நல்ல மனநிலை ஆகியவற்றின் மூலம் மட்டுமே முழுமையான ஆரோக்கியத்தை அடைய முடியும். \"Health is Enthusiasm to Work Holistic Health is Our Wealth\" என்ற கருத்தை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று டாக்டர் புவனேஸ்வரி அறிவுறுத்தியுள்ளார்.

ஜெயங்கொண்டம், தா.பழூர் பகுதியில்

நாளை மின்நிறுத்தம்

ஜெயங்கொண்டம், ஜூலை 31: ஜெயங்கொண்டம் மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் சிலம்பரசன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

வரும் ஆகஸ்ட் 1ஆம் தேதி சனிக்கிழமை அன்று காலை 9 மணி முதல் 110/33-11 கி.வோ ஜெயங்கொண்டம் துணைமின் நிலையம், 33/11 கி.வோ தா.பழூர் துணைமின் நிலையம் மற்றும் 33/11கி.வோ தழுதாழைமேடு துணைமின் நிலையம் ஆகிய துணைமின் நிலையங்களிலிருந்து மாதாந்திர பணிகள் நடைபெற உள்ளதால் இந்த துணைமின் நிலையங்களுக்கு உட்பட்ட ஜெயங்கொண்டம், கல்லாத்தூர், வடவீக்கம், விழப்பள்ளம், உட்கோட்டை, பெரியவளையம், ஆமணக்கந்தோண்டி, குருவாலப்பர்கோயில். பிச்சனூர், வாரியங்காவல். இலையூர், புதுக்குடி, செங்குந்தபுரம்,

தா.பழூர். சிலால். வாணந்திரையன்பட்டினம், அங்கராயநல்லூர், இருகையூர், கோடாலிகருப்பூர். உதயநத்தம், அணைக்குடம். சோழமாதேவி. தென்கச்சிபெருமாள்நத்தம். நாயகனைபிரியாள், பொற்பொதிந்தநல்லூர், இடங்கண்ணி, கோடங்குடி. அருள்மொழி, வாழைக்குறிச்சி, வேம்புகுடி. தென்னவநல்லூர் இடைகட்டு, ஆயுதகளம், தழுதாழைமேடு, வீரசோழபுரம். மெய்க்காவல்புத்தூர் மற்றும் துணைமின் நிலையங்களிற்கு அருகில் உள்ள கிராம பகுதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை மின் வினியோகம் இருக்காது என ஜெயங்கொண்டம் மின்வாரிய உதவி செயற்பொறியாளர் சிலம்பரசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு கிராம வங்கி
TAMIL NADU GRAMA BANK
அரசுடைமை வங்கி Scheduled Bank Owned By Government
தஞ்சை மண்டல அலுவலகம்
ஹெரிட்டேஜ் டவர்ஸ், எண் : 1, முதல் தளம், லஷ்மி நகர், புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர் – 613 005.
Phone : 04362- 226477

தங்க நகை மதிப்பீட்டாளர் (Jewel Appraiser) பணிக்கு
ஆட்கள் தேவை

தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர், அரியலூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் அமைந்துள்ள தமிழ்நாடு கிராம வங்கி கிளைகளுக்கு தங்க நகை மதிப்பீட்டாளர்கள் (Jewel Appraiser) தேவை.

தகுதி : 10–ம் வகுப்பு தேர்ச்சி, அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் நகை மதிப்பீட்டாளர் பயிற்சி முடித்திருக்க வேண்டும்.
வயது : 25 முதல் 65 வரை, முன்அனுபவம் : 5 வருடம்

சுயகுறிப்புடன் (Bio-Data) போட்டோ, கல்வி சான்றிதழ், TC, பயிற்சி சான்றிதழ் நகல், அனுபவ சான்றிதழ், ஆதார், பான், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, காவல்துறையிலிருந்து NOC சான்று ஆகியவற்றின் நகல்களை இணைக்க வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி தேதி : 31.08.2026

விண்ணப்பங்களை தமிழ்நாடு கிராம வங்கி, தஞ்சாவூர் மண்டல அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மூலம் மேலே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். நேரடி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படாது.

விண்ணப்பங்கள் தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும். எவ்வித பரிந்துரைகளும் ஏற்கப்பட மாட்டாது. மீறினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஊதியம், கமிஷன் அடிப்படையில் மட்டும், பணிநிரந்தரம் கோர இயலாது. இந்த தேர்வு நடைமுறையை எந்த நேரத்திலும், எந்த நிலையிலும் நிறுத்தி வைக்க வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு.

மண்டல மேலாளர், தமிழ்நாடு கிராம வங்கி, தஞ்சாவூர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் தகுதியானவர்கள்

ஜீவன் ரக்ஷா பதக்க விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

கலெக்டர் தகவல்

பெரம்பலூர், ஜூலை.31: பெரம்பலூர் மாவட்டத்தில் 2027ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற உள்ள குடியரசு தினவிழாவில் ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகள் வழங்கிட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என

மாவட்டக் கலெக்டர் ஷரண்யா அறிதகவல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது :

வருகிற 2027ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி நடைபெற உள்ள அரசு விழாவில் பெறக்கூடிய, 2026 ஆம் ஆண்டிற்கான, ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகளுக்கு பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. இந்திய அரசின் சார்பாக பல்வேறு நிகழ்வுகளான, நீரில் மூழ்கியவரை காப்பாற்றுதல், மின்சார விபத்துக்கள், தீ விபத்துக்கள், நிலச்சரிவு, விலங்குகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்றுதல், சுரங்க மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டு மனித உயிர்களை மீட்பவர்களுக்கு ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளவரை வீரத்துடன் போராடி மீட்பவர்களுக்கு சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம் என்ற விருதும், துணிச்சலுடன் தாமதமின்றி செயல்பட்டு மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளவரை போராடி மீட்பவர்களுக்கு உத்தம் ஜீவன் பதக்கம் என்ற விருதும், தனக்கு காயம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என தனதுநிலையைப் பொருட்படுத்தாமல் வீரத்துடன் தாமதமின்றி போராடி உயிரைக் காப்பாற்றும் நபர்களுக்கு ஜீவன் ரக்ஷா பதக்கம் என்ற விருதும் வழங்கப்படுகிறது. 2026 ஆம் ஆண்டிற்கான ஜீவன் ரக்ஷா பதக்க விருதிற்கு < https://awards.gov.in/ > என்ற இணையதளம் வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இணையதளம் அல்லாது நேரிலோ அல்லது வேறு இணையதளங்களிலோ விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் முன்னறிவிப்புகள் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பிக்ககடைசி தேதி வருகிற ஆக-15ஆம் தேதி மாலை 5-மணி ஆகும். எனவே, ஜீவன் ரக்ஷா பதக்க விருதுகளுக்கு பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள சிறப்பான சாதனைகள் புரிந்தவர்கள் விண்ணப்பித்து பயன் பெற வேண்டுமாறும், இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரை 7401703516 என்ற தொலைப் பேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறும், மாவட்டக் கலெக்டர் ஷரண்யா அறிவெளியிட்டுள்ள அந்த அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரிக்கு

20 சென்ட் நிலம் தானமாக வழங்கிய திமுக எம்பியின் சகோதரர்

கல்வியாளர்கள் பாராட்டு

பாடாலூர், ஜூலை 31: முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திமுக துணை பொது செயலாளருமான ஆ.ராசா எம்பியின் சகோதரர் ஆ.கலியபெருமாள். ஆண்டிமுத்து சின்னப்பிள்ளை அறக்கட்டளை நிர்வாகி.

இவர் பெரம்பலூர் அருகே கீழக்கணவாய் கிராமத்தில் செயல்படும் அரசு பாலிடெக்னிக் கல்லூரிக்கு 2010-2011 கல்வி ஆண்டில் ஆண்டிமுத்து சின்னப்பிள்ளை அறக்கட்டளை சார்பில் தனது சொந்த நிலம் 5.30 ஏக்கரை நன்கொடையாக வழங்கினார்.

தற்போது கூடுதலாக 20 சென்ட் நிலத்தை அதே கல்லூரி விரிவாக்கத்துக்கு கடந்த 27ம் தேதி வழங்கி உள்ளார்.

மாணவ, மாணவிகள் நலன் கருதி இதுவரை மொத்தமாக 5.50 ஏக்கர் நிலத்தை வழங்கி உள்ளார். இதனால் அறக்கட்டளை நிர்வாகி கலியபெருமாளுக்கு கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் கல்லூரி முதல்வர், துறை தலைவர்கள், விரிவுரையாளர்கள், முதல்வரின் நேர்முக உதவியாளர், கண்காணிப்பாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள், அமைச்சு பணியாளர்கள், அடிப்படை பணியாளர்கள் பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளனர்.

கலியபெருமாளுக்கு நன்றி தெரிவித்து கல்லூரி முன் உள்பட பல இடங்களில் பிளக்ஸ் போர்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

ஞாயிறு தோறும்
மகளிர் மலர்
படியுங்கள்

பெரம்பலூர் நான்கு ரோடு, அரியலூர் பைபாஸ் சாலையில்
பிரம்மாண்டமாய், அதிநவீன வசதிகளுடன்
ஹர்ஷிதா
மருத்துவமனை
• குழந்தையின்மைக்கான சிறப்பு சிகிச்சை
• மகளிர் மகப்பெறு மருத்துவம் & பெண்கள் நல சிகிச்சை
• அதிநவீன அறுவை சிகிச்சை அரங்கம்
• லேப்ராஸ்கோப்பி அறுவை சிகிச்சை • இ.சி.ஜி.
• பொது அறுவை சிகிச்சை • அதிநவீன ஆய்வக வசதி
24 மணி நேரமும் பிரசவம் பார்க்கப்படும்
24hr SERVICE
தேசிய மருத்துவர்கள் தின வாழ்த்துகள்

Dr.S. முருகானந்தம் MBBS.,MS(Gen Surg)
பொது அறுவை சிகிச்சை நிபுணர்
Reg.No : 78805
Dr.T. அருணா முருகானந்தம் MBBS.,DGO.,
மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவ நிபுணர்
Reg.No : 80386
220/47-A, செல்வா நகர், 4 ரோடு, அரியலூர் ரோடு, பெரம்பலூர்
www.harshithaahospital.com Cell : 786 787 6030

GRIHUM
க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி-620 017 தமிழ்நாடு.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீற்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்–ஏலம் மூலமாக 31.08.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும்.

விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீற்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த விலங்கங்கள் / நிர்வாக வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண்: LAP059720000005041535 & HL0059720000005032654 ஆறுமுகம் பழனிச்சாமி (கடன்தாரர்), பத்மினி பழனிச்சாமி (உப கடன்தாரர்) பழனிச்சாமி A	அறிவிப்பு தேதி: 09.04.2025 மொத்த நிலுவைத் தொகை: ரூ.1234742.00/- கடன் கணக்கு எண். LAP059720000005041535 09.04.2025 தேதியின்படி ரூ.6,24,759/- (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்துநான்காயிரத்து எழுநூற்று ஐம்பத்தொன்பது மட்டும்) கடன் கணக்கு எண். HL0059720000005032654 09.04.2025 தேதியின்படி ரூ.6,09,983/- (ரூபாய் ஆறு லட்சத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு முறையே 17.1% மற்றும் 15.6% வட்டியுடன் சேர்த்து.	கையக	திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், மணப்பாறை வட்டம், மணப்பாறை சார் பதிவு அலுவலகம், எஃப். கிழையூர் கிராமம், அனந்தனூர் டவுன், நத்தம் பட்டா எண்.176, நத்தம் சர்வே எண்.375/5பகுதி, தற்போதைய புதிய சர்வே எண்.375/24– இல் உள்ள 80 ச.மீட்டர் அல்லது 861 ச.அடி பரப்பளவு உள்ள சொத்து பின்வரும் நான்கெல்லைகளை உடையது. கிழக்கு: சர்வே எண்.375/32 இல் உள்ள வீராபாகு சொத்து, மேற்கு: சர்வே எண்.375/23 இல் உள்ள சிமெண்ட் சாலை, தெற்கு: சர்வே எண்.375/22 இல் உள்ள சொத்து, வடக்கு: சர்வே எண்.375/25 இல் உள்ள சுப்ரமணி சொத்து.	Rs. 1252650.00/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்)	Rs. 125265.00/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து ஆயிரத்து இருநூற்று அறுபத்தைந்து மட்டும்)	28-08-2026 Before 5 PM	10,000/-	17-08-2026 (11AM – 4PM)	31-08-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை
2	கடன் எண்: HF0128H21100108 பானுஷா (கடன்தாரர்), ஜாஸ்மின் அபுதாஹிர் (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 08.09.2024 மொத்த நிலுவைத் தொகை: 08.09.2024 தேதியின்படி ரூ.16,08,243 (ரூபாய் பதினாறு லட்சத்து எட்டாயிரத்து இருநூற்று நாற்பத்து மூன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு 15% வட்டியுடன் சேர்த்து.	கையக	திருச்சி மாவட்டம் & பதிவு மாவட்டம், திருச்சி 1&2 சார் பதிவு அலுவலகம், திருச்சி மேற்கு தாலுகா, பிராட்டியூர் கிழக்கு கிராமம், எடமலைப்பட்டி புதூர், சர்வே எண்.184,மறு சர்வே எண்.184/3 தொடர்புடைய புதிய சர்வே எண்.51/3483 ச.அடி சொத்து பின் வரும் நான்கு எல்லைகளைக் கொண்டுள்ளது. எல்லைகள்: மேற்கில்: மேல்திரி வீடு மற்றும் வடக்கு தெற்கு பொது வழி, கிழக்கில்: சபோஜான் வீடு, வடக்கில்: பாலு காலி நிலம், தெற்கில்: மாண்ட்ரூ வீடு மற்றும் 2 அடி பாதை வழி	Rs. 1056563.00/- (ரூபாய் பத்து லட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து ஐந்நூற்று அறுபத்து மூன்று மட்டும்)	Rs. 105656.30/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐந்தாயிரத்து அறுநூற்று ஐம்பத்தாறு மற்றும் பைசா முப்பது மட்டும்)	28-08-2026 Before 5 PM	10,000/-	17-08-2026 (11AM – 4PM)	31-08-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை
5	கடன் எண்: LAP059720000005046043 நல்லேந்திரன் S (கடன்தாரர்), சித்திரைச்செல்வி (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 10.09.2025 மொத்த நிலுவைத் தொகை: 10.09.2025 தேதியின்படி ரூ.9,45,344/- (ரூபாய் ஒன்பது லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து முந்நூற்று நாற்பத்து நான்கு மட்டும்) மற்றும் அதனுடனான பணத்தை திருப்பிச் செலுத்துவது வரையிலான ஆண்டொன்றுக்கு 17.85% வட்டியுடன் சேர்த்து.	கையக	புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், குளத்தூர் சார் பதிவு மாவட்டம், குளத்தூர் வட்டம், குன்றாண்டார் கோயில் ஊராட்சி ஒன்றியம், வாழமங்கலம் கிராம பஞ்சாயத்து எல்லை, வாழமங்கலம் வட்டம், சீமனூர் கிராமம், சர்வே எண்.164/19B இல் உள்ள ஹெக்டேர் 0.02.5 ஏர்ஸ்–இன் வடக்கு பகுதியில் உள்ள 125 ச.மீட்டர் அல்லது 3.08 சென்ட்கள் நிலத்தின் நான்கு எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: ராசு வீடு, தெற்கு: சின்னதுரை சொத்து, கிழக்கு: நடைபாதை, மேற்கு: முத்துசாமி காலி நிலம். பரப்பளவு 125 ச.மீட்டர்.	Rs. 1120744.00/- (ரூபாய் பதினொரு லட்சத்து இருபதாயிரத்து எழுநூற்று நாற்பத்து மட்டும்)	Rs. 112074.40/- (ரூபாய் ஒரு லட்சத்து பன்னிரண்டாயிரத்து எழுபத்து நான்கு மற்றும் பைசா நாற்பது மட்டும்)	28-08-2026 Before 5 PM	10,000/-	10-08-2026 (11AM – 4PM)	31-08-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை
7	கடன் எண்: HL0059700000005020596 ருக்மணி பாலு (கடன்தாரர்), மாணிக்கம் பழனியப்பன் (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 09.04.2025 மொத்த நிலுவைத் தொகை: 09.04.2025 தேதியின்படி ரூ.29,53,607/- (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று ஏழு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு 11.85% வட்டியுடன் சேர்த்து.	கையக	புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை பதிவு மாவட்டம், திருமயம் வட்டம், திருமயம் சார் பதிவு அலுவலகம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கடியாபட்டி பஞ்சாயத்து எல்லை, பனங்குடி வட்டம், பனங்குடி கிராமம், நத்தம் பட்டா எண்.747, பழைய சர்வே எண்.552 பகுதி, புதிய சர்வே எண்.741/7 ஹெக்டேர் 0.01.0 ஏர்ஸ் அல்லது 120 ச.மீ. பரப்பளவு உள்ள சொத்து பின்வரும் நான்கு எல்லைகளைக் கொண்டது: மேற்கில்: ஆண்டி கணபதி பண்டாரம் சொத்து, கிழக்கில்: நடைபாதையின் கிழக்கு பகுதி, வடக்கில்: கிழக்கு மேற்கு தெரு, தெற்கில்: கிருஷ்ணன் செட்டியார் சுற்றுச்சுவர்	Rs. 3991575.00/- (ரூபாய் மூப்பத்து தொன்பது லட்சத்து தொன்னூற்று ஒராயிரத்து ஐந்நூற்று எழுபத்தைந்து மட்டும்)	Rs. 399157.50/- (ரூபாய் மூன்று லட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து நூற்று ஐம்பத்தேழு மற்றும் பைசா ஐம்பது மட்டும்)